රෙජිස්ට්‍රාර් ජනරාල් දෙපාර්තමේන්තුව
பதிவாளர் நாயகம் திணைக்களம்
REGISTRAR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය / எனது இல. / My No. } தமிழ் மொழிப்பெயர்ப்பு RG/MBD/01 சுற்றுநிருபம்

ප්‍රධාන කාර්යාලය / தலைமை அலுவலகம் / HEAD OFFICE

තැ. පෙ. අංකය / த. பெ. இல. / P. O. Box No. } 565

ඔබේ අංකය / உமது இல. / Your No. }

234/A3, ඩෙන්සිල් කොබ්බෑකඩුව මාවත, බත්තරමුල්ල.
234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, பத்தரமுல்லை
234/A3, Denzil Kobbakaduwa Mawatha, Battaramulla.

දිනය / திகதி / Date } 2022.10.14

சுற்றுநிருபம் இலக்கம்:07/2022(i)

அனைத்து பிரதேச செயலாளர்கள்/ மாவட்ட பதிவாளர்கள் மூலம்,

அனைத்து மேலதிக மாவட்டப் பதிவாளர்களுக்கு,

**பிறப்புச் சான்றிதழ்களில் பெயர் மாற்றம் மற்றும் புதிதாக பெயரினை உட்புகுத்தல்.**

மேற்படி விடயத்திற்குரிய 2022.06.16 ந் திகதி வழங்கப்பட்ட இலக்கம் 07/2022 உடைய சுற்றுநிருபத்தினை கீழ் குறிப்பிடப்பட்ட விதம் திருத்தம் செய்கின்றேன்.

02. அந்த சுற்றுநிருபத்தில் 03 வது பந்தியில் "வயது வருடங்கள் 07 இற்கு குறைவான பிள்ளைகளின் பெயரினை மாற்றுவதற்கு/ புதிதாக பெயரினை உட்புகுத்துவதற்கு கோரிக்கை சமர்ப்பிக்கப்படுமிடத்து 27 ஆம் பிரிவின் கீழான பிரதிக்கினை மற்றும் பெற்றோரின்/ பாதுகாவலரின் கோரிக்கை கடிதம் மாத்திரம் போதுமானதாகும். " என்பதாகும்.

03. அவ்வாறே அந்த சுற்றுநிருபத்தின் 04 வது பந்தியில் திருத்தத்தினை மேற்கொள்வதற்காக தேவையான ஆவணங்களில் (ii) விடயம் கீழ் குறிப்பிடப்பட்டவாறு திருத்தம் செய்யப்படுகின்றது.

(ii) பெற்றோரின்/ பாதுகாவலரின் கோரிக்கை கடிதம்

04. மேலும் அந்த சுற்றுநிருபத்தில் 11 வது பந்தியில் திருத்தத்தினை நிகழ்த்துவதற்காக தேவையான ஆவணங்கள் கீழ் குறிப்பிடப்பட்டவாறு திருத்தப்படுகின்றது.

<u>திருத்தத்தினை மேற்கொள்வதற்கு தேவையான ஆவணங்கள்</u>

i. 27வது பிரிவின் கீழான பிரதிக்கினை
ii. தகவல்களினைப் பெற்றுக் கொள்ளும் விண்ணப்பம் (இணைப்பு 1 அல்லது இணைப்பு 2)
iii. தினந்தோருமான அல்லது வார இறுதி பத்திரிக்கையில் பிரசுரிக்கப்பட்ட பத்திரிக்கை அறிவித்தல் (பிரசுரிக்கப்பட்டு ஒரு வருட காலம் கடந்திருத்தல் கட்டாயமானதாகும்)
iv. சத்தியக்கூற்று
v. கிராம அலுவலரின் அறிக்கை
vi. பெற்றோரின் திருமணச் சான்றிதழ் (இருக்குமாயின்).
vii. விண்ணப்பிக்கும் பெயர் ஒரு வருடத்திற்கு அதிகமான காலம் பயன்படுத்தியதாக உறுதிப்படுத்தப்படும் ஆவணங்கள் ( 03 ஆவணங்கள் போதுமானது)

* பத்திரிக்கை அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டு ஒரு வருட காலம் கடந்திருந்தால் பயன்படுத்தப்பட்ட ஆவணங்கள் ஒரு வருட காலத்தினை விட அதிக காலம் பயன்படுத்தியிருத்தலுக்கான தேவை அவசியமற்றது என்பதுடன், ஒரு வருட காலத்தினை விட அதிக காலமாயின் பயன்படுத்தியதாக உறுதிப்படுத்தப்படும் ஆவணங்கள் இருக்குமாயின் பத்திரினை அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டு ஒரு வருட காலம் கடத்தல் தேவையற்றதாகும்.

දුරකථන අංකය / தொலைபேசி இல. / Telephone No. } 2889488 2889489
ෆැක්ස් අංකය / தொலைநகல் / Fax No. } 2889491
වෙබ් අඩවිය / இணையத்தளம் / Web site } www.rgd.gov.lk
ඊ මේල් / மின்னஞ்சல் / E-mail } rgd@sltnet.lk rg@rgd.gov.lk

05. இலக்கம் 07/2022 சுற்றுநிருபத்தின் மூல சுற்றுநிருபத்தில் பயன்படுத்திய ஏனைய விடயங்கள் மாற்றமின்றி அதிகாரம் செலுத்தும்.

06. இந்த சுற்றுநிருபம் 2022.10.14 ந் திகதி தொடக்கம் அமுலுக்கு வரும்.

07. தயவுடன் இந்த சுற்றுநிருபம் கிடைக்கப்பெற்றதனை தெரிவிக்கவும்.

ஒப்பம்/ பீ.எஸ்.பீ.அபேவர்தன
பதிவாளர் நாயகம்
பிரதிகள்

1. செயலாளர், அரச நிருவாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு. - தகவலுக்காக
2. செயலாளர், கல்வி அமைச்சு - தகவலுக்காக
3. தேசிய புத்தி பிரதானி, பாதுகாப்பு அமைச்சு. - தகவலுக்காக
4. அனைத்து மாவட்ட செயலாளர்கள்/ மேலதிக பதிவாளர் நாயகங்கள் - தகவலுக்காக
5. தலைமை அலுவலகத்தின் அனைத்து நிறை2வேற்று/ பதவிநிலை அலுவலர்கள் - தகவலுக்காக